**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | SC. No.57/2023 | அரசுதரப்பு சாட்சி P.W.11 |
| பெயர் | வீ.அழகம்மை(காவல் ஆய்வாளர்) | கிராமம் |
| தந்தை பெயர் | வெள்ளக்கண்ணு | வட்டம் |
| வயது | | மாவட்டம் |

Solemnly affirmed by Thiru.P.Manikanda Prabu, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 22.07.2026 As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கோட்டைப்பட்டிணம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 09.01.2022ம் தேதி ஆலங்குடி வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது சம்பட்டிவிடுதி காவல் நிலையத்தில உதவிஆய்வாளரால் பதிவு செய்யப்பட்ட மேற்படி காவல்நிலைய குற்ற எண் 04/2022 இதச பிரிவுகள் 294(b), 324, 307 ன் படி வழக்கு பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்தார். மேற்படி வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 09.01.2022ம் தேதி 05.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஐயப்பன், பிரபு ஆகியோர் முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார்செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.8. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9. பிறகு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த தேவேந்திரன் என்பவரையும் சம்பவ இட சாட்சிகளான சண்முகராஜ், ராமமூர்த்தி, மலர்தேவி, பாக்கியராஜ், கிருஷ்ணமூர்த்தி, செல்லம், சிவா ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கின் எதிரியை தேடிச்சென்று கிடைத்த ரகசிய தகவலின் படி 10.01.2022ம் தேதி காலை 5 மணிக்கு

இச்சடியில் உள்ள ஐயங்கார் பேக்கரியில் வைத்து எதிரி பழனிச்சாமியை காரணம் கூறி 05.15 மணிக்கு கைதுசெய்தேன். பின்பு எதிரி பழனிச்சாமி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அதே சாட்சிகள் கணேசன், திருப்பதி ஆகியோர் முன்னிலையில் எதிரியின் கோழிப்பண்ணை கூரையில் இருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்ததை மகசரில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10. கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.11. அதன் பிறகு சாட்சிகள் கணேசன், திருப்பதி, இந்த வழக்கில் காயம்பட்டவருக்கு விபத்துபதிவேடு பதிவு செய்த மருத்துவர் ேஹமா ஹரிணி மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் சரவணன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 18.01.2022ம் தேதி இந்த வழக்கில் காயம்பட்ட வாதி தேவேந்திரனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் முபாரக்அலி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். காயச்சான்றிதழ் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்டிருந்தகாயம் கொடுங்காயம் என்பதால் வழக்கின் சட்டப்பிரிவை 294 ( b), 326, 307 இதசாவாக சட்டப்பிரிவு மாற்றம் செய்து எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

எதிரியும் புகார்தாரரும் சகோதரர்கள் என்று சொன்னால் சரிதான். அவர்களுக்குள் சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்று சொன்னால் சரிதான். சொத்து சம்மந்தமான ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் நான் கைப்பற்றவில்லை. திருச்சி மருத்துவமனையில் வைத்து சாட்சி தேவேந்திரனை விசாரிக்கும் போது உயர்தர சிகிச்சைக்காக அவர் புதுக்கோட்டை மருத்துவமனையில் இருந்து திருச்சி மருத்துவமனைக்கு வந்ததாக எனது விசாரணையில் கூறினார். எதிரியை கைதுசெய்த இடத்தில் சிசிடிவி கேமரா எதுவும் பொருத்தப்பட்டிருக்கவில்லை. மாத்தூரில் இருந்து புதுக்கோட்டை வரும்

வழியில் நான்கு ரோடுபிரிவை தாண்டிதான் ஐயங்கார் பேக்கரி உள்ளது என்று சொன்னால் சரிதான். திருச்சி கேஎம்சி மருத்துவமனையில் இருந்து பெற்ற தகவலின் அடிப்படையில் சாட்சி தேவேந்திரனிடம் இருந்து நாங்கள் ஒரு புகாரை பெற்றோம் என்று சொன்னாலும் அது வழக்கில் மறைக்கப்பட்டுள்ளது என்று சொன்னாலும் சரியல்ல. எதிரியிடம் இருந்து நான் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்று சொன்னாலும் அதன் அடிப்படையில் சான்றுபொருள் எதுவும் கைப்பற்றபடவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சங்கதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிமீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/-வீ.அழகம்மை(காவல் ஆய்வாளர்)

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/- திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**